## ஏழைகளுக்கு, வேலைவாய்ப்பு இல்லாத இளைஞர்களுக்கு எந்தத் திட்டமும் இல்லை!

# ஒன்றிய பட்ஜெட்டில் சிறப்புத் திட்டம் ஏதுமின்றி தமிழ்நாட்டை முற்றிலும் ஒதுக்கி விட்டார்கள்!

## மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி என்.சிவா கடும் குற்றச்சாட்டு!

**புதுடெல்லி, பிப்.2-**

**ஒன்றிய அரசு நேற்று தாக்கல் செய்த பட்ஜெட்டில் ஏழைகளுக்கான திட்டங்கள் ஏதும் இல்லை. படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்கும் எந்தத் திட்டமும் இல்லை. மொத்தத்தில் தமிழ்நாட்டை புறக்கணித்து முற்றிலும் ஒதுக்கி விட்டார்கள் என்று மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி என்.சிவா கடுமையாக குற்றம் சாட்டியுள்ளார்.**

புதுடெல்லியில் நேற்று (1.2.2025) மாநிலங்களவை கழகக் குழுவின் தலைவர் திருச்சி சிவா அளித்த பேட்டி வருமாறு:-

**கேள்வி:-** இன்றைக்கு ஒன்றிய பட்ஜெட் பற்றிய உங்களுடைய கருத்து என்ன?

அதாவது EastMan கலர்ப்படம் என்று சொல்லலாம். அதாவது, நிறைய அறிவித்திருக்கிறார்கள். நிறைய பேர் அதைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். நான் பின்பு இதைப் பற்றி சொல்கிறேன்.

நமது நாட்டில் வறுமை கோட்டிற்கு கீழ் வாழ்கிறவர்கள் என்று ஒரு Slab வைத்திருக்கிறார்கள். என்ன வருமானம் என்றால், Rural கிராமப்புற பகுதிகளில் வாழ்பவர்களுக்கு ஒரு நாளைக்கு 27 ரூபாய்; நகர்ப்புறத்தில் வாழ்பவர்களுக்கு 33 ரூபாய். அவ்வாறு பார்த்தால், ஒரு மாதத்திற்கு சற்றேறக்குறைய ஆயிரம் ரூபாய்தான் நகர்ப்புறத்தில்; கிராமப்புறத்தில் 800 ரூபாய் வருகிறது. ஒரு மாதத்திற்கு வருமானம் என்பவர்களைதான் BPL Slab என்று வைத்திருக்கிறார்கள். இவ்வாறு வாழ்பவர்கள் எத்தனை கோடி பேர் இந்த நாட்டில்இருக்கிறார்கள்?

நாங்கள் ஆரம்பத்திலிருந்து சொல்கிறோம்...இந்த நாட்டில் இருக்கும் ஒரு விழுக்காட்டினர், நம் நாட்டில் இருக்கும் 50 விழுக்காடு வளத்தை கையில் வைத்திருக்கிறார்கள். 50 விழுக்காடு மக்கள்,3 விழுக்காடு வளத்தைதான் கையில் வைத்திருக்கிறார்கள். அவ்வாறு பார்த்தால், இந்த நாட்டில் ஏழைகள் அதிகம் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த பட்ஜெட்டில் என்ன அறிவித்திருக்கிறார்கள்?

மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தில் ஏதாவது அறிவிப்பு இருக்கிறதா என்றால், ஒன்றும் இல்லை.

எங்களுடைய குறிக்கோள் 10 ட்ரில்லியன் டாலர் என்று சொல்கிறார்கள். அதற்கு அடிப்படையாக - முக்கியமாக அவர்கள் செய்ய வேண்டியது, வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். இதுவரைக்கும் வேலை வாய்ப்பு எவ்வாறு உருவாக்கி இருக்கிறார்கள்? ஒன்றும் இல்லை. அதற்கான திட்டங்களும் எதுவுமே இல்லை.

அறிவித்திருப்பதெல்லாம், சிலர் சொல்வது போன்று அவர்கள் கூட்டணிக் கட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்பது, சரி,அது அவர்களின் அரசாங்கத்தை காப்பாற்றிக் கொள்வதற்கான முயற்சியாக இருக்கலாம்.

**தமிழ்நாடு பல துறைகளில் முன்னணியில் இருக்கிறது!**

தமிழ்நாட்டிற்கு எதுவும் தரவில்லை என்கிறார்கள், தமிழ்நாடு தன்னைச்சையாகவே நாங்கள் பெரிய அளவில் உயர்ந்து நிற்கிறோம் என்பது, ஒரு உண்மை அது. எவ்வாறு சொல்கிறோம் என்றால், இந்திய நாட்டின் Per Capita Income என்பது 1.69 லட்சம்; உத்தரப்பிரதேசம் 90 ஆயிரம்; பீகார் 60 ஆயிரம்; தமிழ்நாடு 3.08 லட்சம். எனவே, நம்முடைய செயல்பாடுமிகவும் நன்றாக இருக்கிறது. சேவைத் துறை- தொழில் துறை விவசாயம் மூலமாக நாம் இந்தியாவின் பல இடங்களில் முன்னிலையில் இருக்கிறோம். அது ஒரு பக்கம் இருக்கிறது.

12 லட்சம் ரூபாய் வருமான வரி விலக்கு அதைப்பற்றி பேசுங்கள் என்றுதான் எல்லோரும் கேட்கிறீர்கள்; கேட்பார்கள். அந்த 12 லட்சம் ரூபாய் வரி விலக்கில் எவ்வளவு பேர் பயன் அடைகிறார்கள்? இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் 140 கோடி. வரி செலுத்துபவர்கள் 7.5 கோடி. அதில் வருமான வரி செலுத்துபவர்கள் 2 கோடி பேர் தான். அப்போது,

2 கோடி மக்கள் பயனடையும் ஒன்றை அறிவித்திருக்கிறார்கள். அதுவும் எந்த பிரிவு என்று பார்த்தால், அந்த 12 லட்சம் என்பது மாதத்திற்கு 75 ஆயிரம் சம்பாதித்தால்தான் அந்த 12 லட்சம் என்பது வர முடியும். 50,000லிருந்து சம்பாதிக்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள்.12 இலட்சத்திற்கு கீழேயும் வரலாம்;12 லட்சம் வரைக்கும் என்று சொல்லும்போது, பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கு Slab என்பது 8 லட்சம் என்று வைத்திருந்தார்கள். அவர்கள் எவ்வாறு பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் ஆவார்கள்? அவ்வாறு பார்த்தால், அவர்களுக்கு ஒரு மாதத்திற்கு 30, 40 ஆயிரம் ரூபாய் வருகிறது. அது எவ்வாறு வர முடியும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

நான் முதலிலேயே சொன்னது போன்று, கிராமப்புறத்தில் வாழ்பவர்களுக்கு நீங்களே 27 ரூபாய்தான் குறியீடு வைத்திருக்கிறீர்கள்.நகர்ப்புறத்தில் வாழ்பவர்களுக்கு 33 ரூபாய். கூலி வேலை பார்ப்பவர்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள்? சாதாரணமான ஆட்டோ டிரைவர்கள், மற்றவர்கள்... இவர்களில் எல்லாம் யார் வருமான வரி கட்டுகிறார்கள்?அதெல்லாம் ஒன்றுமே இல்லை. அவர்களுக்கு எல்லாம் என்ன திட்டம் இருக்கிறது?

**ஏழைகளின் பிரச்சினைகளை ஒன்றிய அரசு அணுக வேண்டும்!**

நீங்கள் அடிப்படையான ஏழைகளின் பிரச்சினைகளை அணுக வேண்டும். ஏனென்றால், இந்தியா மக்கள் தொகையில் உலகில் இரண்டாவது பெரிய நாடு. விரைவில் முதல் இடத்தில் செல்ல இருக்கிறோம். சீனா, நம்மைவிட அதிகம் இருப்பவர்கள், மக்கள் தொகையில் நமக்கு பின் செல்ல இருக்கிறார்கள்; பொருளாதாரத்தில் நம்பர் ஒன் செல்ல இருக்கிறார்கள். Per Capita Incomeஅதிகம். ஆனால், இந்தியாவில் வேலைவாய்ப்பில்லை; ஏழை மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். நீங்கள் ஊரக வேலை வாய்ப்புத் திட்ட நாட்களை அதிகரியுங்கள்; அதற்கு சம்பளத்தை கொஞ்சம் அதிகரிங்கள் என்று கேட்பவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்?150, 200 ரூபாய் கொடுப்பதை நம்பிக்கொண்டு கிராமபுரத்தில் அவ்வளவு பேர் காத்துக் கொண்டிருக்கும்போது, நீங்கள் 12 லட்சத்தையும் Rosy Picture என்று காட்டிக் கொண்டிருக்கிறீர்கள். நாங்கள் அதை வேண்டாம், தவறு என்று

இல்லை. அதனால்தான், அவர்கள் எங்களுக்கு எதாவது வேலை கொடுங்கள்? கூலிக்கு வேலை கொடுங்கள் என்று கேட்கிறார்கள்.

**வேலை தேடி வட மாநிலத்தவர் தமிழ்நாட்டுக்கு வருகிறார்கள்!**

தமிழ்நாட்டின் பொருளாதாரம் நான் இப்போது சொன்னது போன்று 3.09 Lakh Per Capita Income. தமிழ்நாடு தான் Booming ஆக சென்று கொண்டிருக்கிறது. பீகாரிலிருந்து, உத்தரபிரதேசத்திலிருந்து வேலை தேடி அங்குதான் வருகிறார்கள். காரணம், அங்குதான் வேலைவாய்ப்பு இருக்கிறது; அங்குதான் சம்பளம் கொடுக்கும் அளவிற்கு இருக்கிறோம்; அங்குதான் உற்பத்தி பெருகுகிறது. உற்பத்தி பெருகினால்தான் வேலை வாய்ப்பு தர முடியும். அங்கு ஒரு மாநிலம் நன்றாக செய்து கொண்டிருக்கிறது. அந்த மாநிலத்திற்கு மேற்கொண்டு எதுவும் செய்யாமல், நம்மை அதிக வழிகளில் தண்டனை தருகிறார்கள்.நமக்கு தர வேண்டிய Devaluation of Taxes என்பது நிதிக் குழுவின் அறிக்கைப்படி என்றால் 41 சதவீதம். 42 இருந்தது, அதை கடந்த நிதிக் குழுவில் 41ஆக மாற்றி விட்டார்கள். அதுகூட வருவதில்லை. ஜி.எஸ்.டி.யில் நம்மிடம் இருந்து நிறைய வரி வாங்கிக் கொள்கிறார்கள். நமக்கு வர வேண்டியது வரவில்லை. கடந்த வருடம் நாம் ஒன்றிய அரசிற்கு கொடுத்த பணம் 4.75 கோடி. நமக்கு திரும்ப கிடைத்தது 2.64 கோடி. எனவே,National poolக்கு,we are contributing more; whereas we are victimizing more. நமக்கு எந்த விதமான சலுகைகளும் இல்லை என்பதைவிட, வஞ்சிக்காமலாவது இருக்கலாம்.நாம்ஜி.எஸ்.டி.யால் ஒவ்வொரு வருடமும் 20,000 கோடி இழப்பிலேயே இருக்கிறோம்.

இன்றைக்கு, இந்த பட்ஜெட்டில் 84 வது பிரிவில் அவர்கள் தொல்பொருள் ஆராய்ச்சியைப் பற்றி சொல்கிறார்கள். அவ்வாறு சொல்கிறபோது, இந்திய நாட்டில் பல அற்புதமான விஷயங்கள் எல்லாம் இருக்கிறது. அதிலிருந்து நிறைய கண்டுபிடிக்கப்போகிறோம் என்று சொல்கிறார்கள். அதாவது, Documentation and conservation of our manuscript heritage with academic institutions,musiums, libraries and private collectors will be undertaken to cover more than one crore manuscript. இந்த இடத்தில் ஒரு



எனவே, இந்த வளர்ச்சியின் முதல் கட்டத்தில் இருந்தவனே தமிழன் என்று சொல்கிறபோது, நான் கேட்கிறேன், தமிழ்நாட்டில் இருந்து வந்திருக்கும் நிதி அமைச்சர் இவ்வளவு சொல்கிறபோது, என் தாய் தமிழ்நாட்டில் 5,370 ஆண்டுகளுக்கு முன்பே தமிழன் இரும்பை பயன்படுத்தினான் என்பது தொல்பொருள் ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்டது என்று ஏன் சொல்லவில்லை? நான் எங்களுக்கு எதுவும் கொடுக்கவில்லை என்பதை எல்லாம் இன்னொரு பக்கம் வைத்துக் கொள்கிறேன்.எங்களுக்கு எந்தத் திட்டங்களும் அறிவிக்கவில்லை என்பதை இன்னொரு பக்கம் வைத்துக் கொள்கிறோம். ஆனால் குறிப்பிட வேண்டிய இடத்தில்கூட குறிப்பிடாமல் தவிர்க்கிறார்கள் என்றால், எதிர்க்கட்சிகள் ஆளுகிற மாநிலங்கள் இப்படித்தான் புறக்கணிக்கப்படும். எங்களுக்கு ஆதரவு தருகிற மாநிலம் ஆந்திராவாக இருக்கலாம், பிஹாராக இருக்கலாம்... அவர்களுக்கு நிறையத் தருவோம் என்பதுதான் இந்த நிதிநிலை அறிக்கையில் வெளிப்படுத்தி இருக்கும் ஒன்று.

என்னுடைய சிம்பிள் பாயிண்ட் என்னவென்றால், ஏழைகளுக்கு வேலைவாய்ப்பு இல்லாதவர்களுக்கு - படித்துவிட்டு வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு எல்லாம் எந்தத் திட்டமும் இல்லை. ஏன் டெல்லியில் இவர்கள் தேர்தல் அறிக்கையில் குடும்பத்திற்கு 2,500 தருவோம் என்று போட்டிப் போட்டுக்கொண்டு சொல்கிறார்கள். வருமானத்திற்கு வழியில்லாத காரணத்தினால்தானே. நான் மிகவும் நிதானத்தோடு வார்த்தைகளை சொல்கிறேன். வருமானத்

யில் அனைத்தையும் சொல்லிவிட முடியாது. அவர்களுடைய மொத்த வருமானம் எவ்வளவு? அதில் அரசாங்கத்திற்கு எவ்வளவு வருமானம் என்று பார்த்தால், அனைத்துமே ஆயிரக்கோடிகணக்கில்தான் வரும். ஆனால்,L.I.C. இலட்சக்கணக்கான கோடி ரூபாய். அரசாங்கத்திற்கும் கொடுக்கிறது; மக்களுக்கும் கொடுக்கிறது. ஏஜென்சியை வாழ வைக்கிறது. அனைத்திற்கும் மேல், நம்முடைய Asset என்பது, It goes upto 65 Lakh Crore Rupees L.I.C. நீங்கள் அதைக் கொண்டு வந்து விட்டீர்கள் என்றால், மெல்ல மெல்ல தள்ளிவிட்டு விடுவீர்கள் அல்லவா... அந்த ஊழியர்கள் எல்லாம் என்ன ஆக்கப்படுவார்கள்?

ஒன்றைக் காண்பித்து விட்டு அனைவரின் கவனமும் அங்கேயே திரும்பிக் கொண்டிருக்கிறது. அந்த ஒன்றிலும் நான் சொல்வது, பாராட்டலாம்; ஒரு பிரிவினர் மகிழ்ச்சி அடையலாம். அவர்கள் மிகவும் குறைவான எண்ணிக்கை. ஆனால், அவர்களும் வாங்கும் பணத்தில்,மீதப்படுத்தும் பணத்தில் அவர்கள் என்ன செய்ய முடியும் என்று கேட்டீர்கள் என்றால், ஏற்கனவே விலைவாசி உயர்ந்திருக்கும் பொருளை வாங்குவதற்கான சக்தி கிடைக்கும்.

**ஒரு கண்ணுக்கு சுண்ணாம்பு! ஒரு கண்ணுக்கு வெண்ணெய்!**

பண வீக்கம் என்பது அதிகமாகிவிட்டது. தமிழ்நாடு ஜி.டி.பி.யிலேயே எங்கு நிற்கிறோம்... நீங்கள் சொல்வதைவிட எங்களுடைய எங்கு இருக்கிறது...நாங்கள் ஜி.டி.பி.யிலும் அதிகமாக இருக்கிறோம்; தனிநபர் வருமானத்திலும் அதிகமாக இருக்கிறோம்; அனைத்திலும் முதலிடத்தில் வந்து காட்டுகிறோம். ஆனால், நீங்கள் எதிலும் முன்னனியில் இல்லை. National Averageலும்Failure. நீங்கள் Support செய்கிற மாநிலங்களும் Failure. ஆனால், எங்களை மட்டும் நீங்கள் வஞ்சனை செய்து கொண்டே இருப்பீர்கள் என்றால், நாங்கள் இதையம் தாங்குவோம், எதையும் தாங்குவோம் என்பது வேறு. ஆனால், ஒரு பெரிய நாட்டில் அனைத்து மாநிலங்களையும் ஒன்றாக கருத வேண்டிய ஒன்றிய அரசு, ஒரு கண்ணுக்கு வெண்ணையும் ஒரு கண்ணுக்கு சுண்ணாம்பும் வைப்பது ஏற்புடையதாக இருக்காது.

அதனால்தான், நான் சுருக்கமாக சொன்னேன்... இந்த தொல்பொருள்

## தொல்பொருள் ஆராய்ச்சியில் கூட தமிழனின் பெரிய வரலாற்றை ஒன்றிய அரசு மறைத்து விட்டது!

சொல்லவில்லை. நடுத்தர வர்க்க மக்கள் என்று சொல்கிறார்களே, நடுத்தர வர்க்க மக்கள் என்பவர்கள் எவ்வளவு பேர்?வருமான வரி கட்டும் நடுத்தர வர்க்கத்தினர் 2 கோடி பேர். அதற்கு அப்பாற்பட்டிருப்பவர்கள்?

இன்னொன்று, நாளுக்கு நாள் இந்திய ரூபாயின் மதிப்பு குறைந்து கொண்டே செல்கிறது. இப்போது ஒரு டாலரின் மதிப்பு என்பது 86.அது விரைவில் 100ஐ தொடும் என்கிறார்கள்.எனவே, நம்முடைய பண மதிப்பு குறைந்து கொண்டே செல்கிறது. உங்கள் கையில் பணம் வந்தால்தான் பொருள் வாங்க முடியும் என்ற நிர்பந்தத்திற்கு ஆளாகிறீர்கள். இந்திய நாட்டில் பொருட்களின் விலை அதிகரிக்கிறபோது, அது வாங்குவதற்கே வழியில்லாமல் கையில் பணம் இல்லாமல் தவிக்கிற மக்களுக்கு, இதன் மூலமாக இவ்வாறு தருகிறார்கள். இந்தப் பணம் மீதம் ஆகிவிட்டது. இதில் இரண்டு வாங்குகிறேன் என்று வேறு. நீங்கள் ஒன்று விலை அதிகமானதை வாங்குவதற்கான சக்தியை ஓரளவிற்கு நடுத்தர வர்க்கத்தினர் பெறுவார்கள்; பணக்காரர்கள் பெறுவார்கள். ஏழைகளுக்கு சோற்றிற்கே வழி

வார்த்தையாவது, அண்மையில் தமிழ்நாட்டில் முதன்முதலாக இரும்பைக் கண்டுபிடித்தவன் தமிழன் என்று தி.மு.க.வில் இருக்கும் யாரும் சொல்லவில்லை; தமிழ்நாடு அரசு சொல்லவில்லை; புனே, அலகாபாத் மற்றும்U.S.A.வில் இருக்கும் ஆராய்ச்சி நிறுவனங்கள் சொல்லியிருக்கிறார்கள். அங்கு, கீழடி, சிவகளை, ஆதிச்சநல்லூரில் கண்டுபிடித்த பொருட்களின் காலம் என்பது கி.மு.3,345.இப்போது நாம் இருப்பது கி.பி. அதாவது, CE Common Era. அதற்கு முன் BCE. அந்த BCE இல்3,345 என்றால் இப்போது சற்றேறக்குறைய 5,370 ஆண்டுகளுக்கு முன்னால் தமிழன் இரும்பைப் பயன்படுத்தி இருக்கிறான்.

**தமிழ்நாட்டு வரலாற்றை மறைக்கும் ஒன்றிய நிதியமைச்சர்!**

இரும்பு என்பது Metalage.அதாவது, Stonage, Metalageஎன்று வரலாற்றில் ஒன்று உண்டு.கற்கால மனிதனாக இருக்கிறான்; முதலில் ஒன்றுமே கிடையாது, அதில்தான் ஆயுதங்கள்; பின்னாலில் உலோகம் கண்டுபிடித்து, அதில் ஆயுதங்கள்; இது வளர்ச்சியின் அடையாளம்.

திற்கு வழியில்லாதவர்கள் என்று கண்டுபிடித்து நீங்கள் தருகிறீர்கள் அல்லவா? 2,500க்குப் பிறகு ஏன் நீங்கள் பணக்காரர்களைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறீர்கள்?

**எல்.ஐ.சி.யின் நிலையை ஒன்றிய அரசு ஆபத்தில் வைத்துள்ளது!**

காப்பீட்டுத் துறையில் 100 சதவீதம் வெளிநாட்டு முதலீடு வரலாம் என்று சொல்லிவிட்டார்கள். இந்தியாவில் L.I.C.தான் மிகப்பெரிய காப்பீட்டு நிறுவனம். மக்களின் நம்பிக்கைக்குரிய நிறுவனம் L.I.C. ஏற்கனவே அவர்கள் கதறிக் கொண்டிருக்கிறார்கள். 5 சதவீதம் Disinvestment செய்து Public Sector என்று விற்றார்கள். Public Sector விற்றபோது சாதாரணமான மக்கள்தான் வாங்கிக் கொண்டிருந்தார்கள். ஏழை எளியவர்கள்தான் அதை வாங்கிக் கொண்டிருந்தார்கள். மற்றவர்கள் எல்லாம் தனியாருக்கு சென்று கொண்டிருந்தார்கள். இப்போது,100 சதவீதம் வெளிநாட்டில் இருந்து வந்து விட்டால், கரையான் தின்பது மெதுவாக இதையும் தின்றுவிடும். ஏற்கனவே, தனியார் நிறுவனங்கள் வந்திருக்கிறது. நீங்கள் statistics எடுத்துப் பாருங்கள். இந்த ஒரு பேட்டி

ஆராய்ச்சியில்கூட தமிழனின் பெரிய வரலாற்றை மறைத்து விட்டார்கள். இதுதான் இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி சொல்ல முடியும்.

**கேள்வி:** தொல்பொருள் ஆராய்ச்சி போன்ற பல்வேறு துறைகளில் தமிழ்நாடு முன்னேறி இருக்கிறது என்பதை ஒப்புக் கொள்ளும் ஒன்றிய அரசு பொருளாதார ஆய்வறிக்கையில் அதை சொல்லி இருக்கிறார்கள். ஆனால், ஒன்றிய அரசு தாக்கல் செய்துள்ள பட்ஜெட்டில் தமிழ்நாடு தமிழ்நாட்டின் முன்னேற்றம் தமிழ்நாடு திட்டங்களுக்கு, தமிழ்நாட்டில் பெயரை சொல்லைவில்லை என்றாலும், தமிழ்நாட்டின் ஒரு திட்டத்தைப் பற்றியும்அவர்கள் சொல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. கடந்த பட்ஜெட்டிலுல் அதேதான் நடந்தது. இந்த பட்ஜெட்டிலும் அதே நிலைதான் இருக்கிறது. ஏன்,ஒன்றிய அரசு இது போன்று நடந்து கொள்கிறது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

**திருச்சி சிவா:** அதைத்தான் நான் முதலிலேயே சொல்லிவிட்டேன். நாங்கள் அனைத்திலும் சிறப்பாக செயல்படுகிறோம். ஆனால், We are being penalised. மக்கள் தொகைக் கட்டுப்பாட்டில் முதலிடத்தில் கேரளா, தமிழ்நாடுதான் இருக்கிறது. ஆனால்,எங்களுக்கு ஒதுக்கீட்டில் என்ன தருகிறார்கள்? அவர்கள் பாவம், அவர்களுக்கு நிறைய மக்கள் தொகை இருக்கிறது. நாளை, நீங்கள் தொகுதிப் பிரித்தாலும் அவ்வாறுதான் பிரிப்பீர்கள். எனவே, சிறப்பாக செயல்படுபவர்களை தட்டிக் கொடுப்பதற்கு பதிலாக, அவர்களை பட்டினிப் போடுகிற ஒரு அணுகுமுறை இது.

**தமிழ்நாட்டை ஒதுக்குகிறார்கள்!**

அதாவது, Approach is Wrong - ஒன்று. இரண்டாவது, தங்களை எதிர்க்கும் கட்சிகள் ஆளுகின்ற மாநிலங்களை இப்படித்தான் நாங்கள் நடத்துவோம் என்பதை சூசகமாக திருப்பித் திருப்பி அவர்கள் சொல்கிறார்கள். அதை நான் முதலிலேயே சொல்லி விட்டேன்.எனவே, தமிழ்நாட்டை பாராட்டவில்லை என்பதை இன்னொருபக்கம்வைத்துவிட்டாலும்கூட, தமிழ்நாட்டிற்கென்று எந்த சிறப்பான திட்டங்களும் இல்லை. நாம் கேட்டுக் கொண்டிருக்கும் பல சாலை விரிவாக்கம்; ஒசூர் - ஜோலார்பேட்டை;இரயில்வே திட்டங்கள். எதுவுமே இல்லை. Totally Depriving Tamilnadu of the any Schemes are benifits that are being announced by the Union Government. இதுதான் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக பார்த்தீர்கள் என்றால், அனைத்து கண்ணோட்டத்திலும் தான் இப்போதும் செயல்படுகிறார்கள்.

**கேள்வி:** மொத்தமாக இந்த பட்ஜெட்டை எவ்வாறு பார்க்கிறீர்கள்?

**திருச்சி சிவா:** நான் ஏற்கனவே சொல்லிவிட்டேன். ஒன்றைக் காட்டி இது சிறப்பானது என்று சொல்கிறபோது, மற்றவைகளில் எல்லாம் Statisticsதான் வருகிறது. இதற்கு முன்பு வந்த நிதிநிலை அறிக்கையில் என்ன சொல்லப்பட்டது? எவ்வளவு நடைமுறைக்கு வந்தது? என்று பார்த்தீர்கள் என்றாலே, Progress Report will be Very Very Very ...

**ஒன்றிய பட்ஜெட் மூலம் எதையும் சாதிக்க முடியாது!**

**கேள்வி:** பிரதமரோ, நிதி அமைச்சரோ என்ன சொல்கிறார்கள் என்றால், அனைத்து தரப்பினரையும் உயர்த்தும் ஒரு பட்ஜெட் என்று சொல்கிறார்கள்.

**திருச்சி சிவா:** அவர்கள் வேறு என்ன சொல்வார்கள் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்... உங்களில் சிலரே கூட இது நன்றாக இருக்கிறது என்று சொல்வதுபோல, ஒரு Picture கொடுத்துவிட்டார்களே தவிர, ஆனால் அதில் ஒன்றுதான் இது போன்று மேலோட்டமாக பார்ப்பதற்கு நன்றாக தெரிகிறதே தவிர, Statisticsதான் அதிகம் இருக்கிறது. All are in Paper. When it will come to practical.

Implement செய்வது எப்போது என்றால், அதற்கு வாய்ப்பே கிடையாது. ஏற்கனவே, அது அதிகம் Negative ஆகதான் சென்று கொண்டிருக்கிறது. பல நேரங்களில் Inflation கூடிப்போகிறது. ஜி.டி.பி. அடிபடுகிறது. இவர்கள் சொல்வதெல்லாம், Reace செய்வது எவ்வளவு காலம்...

இவர்கள் சொல்லிக் கொண்டே இருக்கலாம்...5 வருட காலத்தில் நாங்கள் இத்தனை சாதிக்கப்போகிறோம் என்று இப்போது சொல்கிறார்கள். இந்த வருடத்தில் என்ன Progress என்று காட்டுங்கள். கடந்த வருடத்தை விட இந்த வருடத்தில் நிதி ஒதுக்கீடு எவ்வளவு செய்திருக்கிறீர்கள் என்பதைவிட, நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்? Give the Report. அவ்வளவுதான்.

**கேள்வி:** பெரிய பெரிய பொருட்களுக்கு வாரியம் பால் வாரியம் போன்ற பல்வேறு வாரியங்கள் அமைக்கப்பட்டிருக்கும் இந்த நாட்டில், மக்கானா என்று சொல்லப்படும் தாமரை விதையில் இருந்து உருவாகும் ஒரு பொருளுக்கு வாரியத்தை அமைப்பதற்கு ஒன்றிய அரசு இந்த பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடுசெய்திருக்கிறார்கள். இது பீகாரை கணக்கில் கொண்டு அறிவிக்கப்பட்டதா?

**திருச்சி சிவா:** பீகாரா? உத்தரப்பிரதேசமா? என்று கிடையாது. அவர்கள், மறைமுகமாக அவர்கள் கட்சியின் சின்னத்தை சொல்கிறார்கள். தேர்தல் நேரத்தில் பட்ஜெட் அறிவிப்பில் தாமரை என்று அவர்கள் சொல்கிறார்கள்.நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். பார்க்க வேண்டிய தேர்தல் ஆணையம் எல்லாம் பார்க்க வேண்டும்.இரண்டாவது, அது எவ்வளவு இடங்களில் விளைகிறது? அதில் எவ்வளவு கிடைக்கும்? அதில் எவ்வளவு பேர் பயனடைகிறார்கள்?தமிழ்நாட்டில், தாமரையானது குளம், குட்டைகளில் கொஞ்சம் கொஞ்சம் கிடக்கிறது. யாரும் அதை மெனக்கெடுத்து வளர்ப்பதில்லை. இங்கு வளர்ப்பது போன்று. அதனுடைய பயன்பாடு, அதனால் பயன்பெறுபவர்கள் என்பவர்கள் மிக மிக குறைவு. அதை கணக்கில் எடுக்க முடியாது.

இவ்வாறு திருச்சி சிவா பேட்டியளித்தார்.